[1972 மார்ச் 11

* 442. வினு—திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

குசஸ்தலி ஆற்றில் பாலம் கட்ட திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழகத்தில் இது ஒரு முக்கியமான திட்டமாக இருப்பதால், இத்திட்டத்திற்கு ‘ இண்டர் ஸ்டேட்ஸ் எக்னுமிக் ரிலேஷன்ஷிப் ’ நிதி பெற்று, இதனுல் விவசாய உற்பத்தி மேம்பாடு அடையும் என்பதால், இதை ஒரு தனித் திட்டமாக நிறைவேற்ற மத்திய அரசை நமது அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The work was among the 13 works recommended for inclusion in the Fourth Five-Year Plan under the Inter-State Economic Improvement Scheme. The Government of India had selected only three works.

அதனுலே இதை ஏற்கவில்லை.

The Chief Engineer's recommendation to include the work in the Central Road Fund Scheme in the Fourth Five-Year Plan is being pursued separately.

இராமலிங்கபுரத்தருகே புதுக் கண்மாய்

* 443. வினு—திரு எஸ். அழகுத்தேவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம்—சாத்தூர் வட்டம், இராமலிங்க புரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், இராம லிங்கமபுரம் கிராமத்தில் புதிய கண்மாய் ஒன்று ரூபாய் 2.83 லட்சத்தில் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.